# சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
## எம்பிலிபிட்டிய கல்வி வலயம்
## இடர் கால முகாமைத்துவ செயலட்டை - 05

**தரம் - 04 2021 தமிழ் மொழி**

### மண் அடுப்பு

சில ஆண்டுகளுக்கு முன்புவரை, கிராமங்களில் விறகு அடுப்புகள் தான் அதிகம். விறகு அடுப்புகளிலும் பல வகை உண்டு.

பெரும்பாலான பகுதிகளில், பிரதான வீட்டிலிருந்து ஒதுங்கியே அடுப்படி இருக்கும். ஒரு பாத்திரம் வைக்கும் அடுப்பு, இரண்டு பாத்திரங்கள் வைக்கும் அடுப்பு உண்டு. இரு பாத்திரங்கள் வைக்கும் அடுப்பில், ஒரு பகுதியில் விறகு நுழைப்பதற்கான வாய் இருக்கும். ஒரு புறத்தில் இருந்து மற்றொரு அடுப்புக்கு தீச் சுடர் செல்ல வழி இருக்கும். மேற்பகுதியில் பாத்திரம் நிலையாக நிற்க, மூன்று குமிழ்கள் இருக்கும். மண்ணில் செய்யப்பட்ட இவை, சுவரை ஒட்டி அமைக்கப்பட்டிருக்கும். புகை போக்கிகளுடன் இணைக்கும் வகையில், அடுப்பின் ஒரு மூலையில் துளை இடப்பட்டிருக்கும். அந்தத் துளை மண் குழாயுடன் இணைக்கப்பட்டு, குழாய், கூரையின் மேல் பாகத்துக்கு வெளியே நீண்டிருக்கும். இரட்டை அடுப்புக்குச் சில பகுதிகளில் **கொடியடுப்பு** என்ற பெயர் உண்டு. தனியே எடுத்துச் செல்லும் வகையிலும், சுவருடன் இணைக்கும் வகையிலும் இருக்கும்.

**குமுட்டி அடுப்பு** என்று ஒரு வகை உண்டு. அது மண், இரும்பு என இருவகையில் செய்யப்பட்டது. மேல் பாகம் பாத்திரம் வைப்பது போல் வடிவமைக்கப்பட்டிருக்கும். அதன் நடுப்பகுதியில் சல்லடை போல் இருக்கும். அந்தப் பகுதியில் மரக்கரித் துண்டுகள், உமி போன்றவற்றை இட்டுப் பற்ற வைக்க வேண்டும். கரியும் உமியும் மெதுவாக எரிய எரிய அதன் சாம்பல், சல்லடை வழியாகக் கீழிறங்கி விடும். மழைக்காலங்களில் விறகு கிடைக்காது. எனவே, நம் முன்னோர் விறகை, அரைகுறையாக எரித்துக் கரியாக மாற்றி அதனைப் பயன்படுத்தினர்.

**01) மேலுள்ள கட்டுரைப் பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கிராமங்களில் எவ்வகையான அடுப்பு பயன்படுத்தப்பட்டது?

   ……………………………………………………………………………………...

2. இரண்டு பாத்திரங்கள் வைக்கும் அடுப்பின் சிறப்பியல்பு யாது?

   ……………………………………………………………………………………...

3. நம்முன்னோர்கள் மழைக்காலங்களில் விறகுக்குப் பதிலாக எதைப் பயன்படுத்தினர்?

…………………………………………………………………………………………...

4. இரட்டை அடுப்புக்கு சில பகுதிகளில் வழங்கப்படும் பெயர் என்ன?

…………………………………………………………………………………………...

5. பொதுவாக மண் அடுப்பின் பயன்பாட்டில் கிராம மக்கள் பெற்றுக் கொண்ட நன்மைகள் யாது?

…………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………...

**02) கீழே தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்து வாசியுங்கள்.**

பெரும்பாலான பகுதிகளில், ………………………… வீட்டிலிருந்து ஒதுங்கியே அடுப்படி இருக்கும். ஒரு ……………………….. வைக்கும் அடுப்பு, இரண்டு ………………………… வைக்கும் அடுப்பு உண்டு. இரு பாத்திரங்கள் வைக்கும் அடுப்பில், ஒரு பகுதியில் விறகு ……………………… வாய் இருக்கும். ஒரு புறத்தில் இருந்து மற்றொரு அடுப்புக்கு தீச் சுடர் செல்ல வழி இருக்கும். மேற்பகுதியில் ……………………….. நிலையாக நிற்க, மூன்று …………………….. இருக்கும்.

03) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. "சமுத்திரம்" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

…………………………………………………………………………………………...

2. "அண்மை" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

…………………………………………………………………………………………...

3. "புத்திரன்" என்பதன் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.

…………………………………………………………………………………………...

4. "உவகை" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

…………………………………………………………………………………………...

5. "சேவகி" என்பதன் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.

…………………………………………………………………………………………...

6. "இளமை" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

…………………………………………………………………………………………...